# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 76 — 1973 සැප්තැම්බර් 07 වැනි සිකුරාදා — 1973.09.07

76 ம் இலக்கம்—1973 ம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

**(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)**


# பகுதி IV—உள்ளூராட்சி

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் .. .. | 357 | வரவு செலவுக் கூற்றுக்கள் .. .. | — |
| பதவிகள்—வெற்றிடம் .. .. | 358 | வரவு செலவுத் திரட்டுக்கள் .. .. | — |
| பரீட்சைகளும், பரீட்சைப் பெறுபேறுகளும், பிறவும் .. | 363 | ஆதன விற்பனைகள் .. .. .. | — |
| துணை விதிகள் .. .. .. | — | வீதிச செயற்குழுவின் அறிவித்தல்கள் .. ... | — |
| உள்ளூராட்சி அதிகார நிலையத்தேர்தற் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | — | நானாவித அறிவித்தல்கள் .. .. .. | — |


**கவனிக்க.**—அரச காணிகள் விற்பனை (சிறப்பேற்பாடுகள்) சட்ட மூலமும் கமத்தொழிற் காணிகள் சட்ட மூலமும் 1973 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 31 ஆந் திகதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்கு குறைநிரப்பிகளாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளன.

## உள்ளூராட்சி அறிவித்தல்கள்

### கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்

(257 ஆம் அத்தியாயமான) கிராமச்சபைகள் கட்டளைச் சட்டத்தின் 8 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் பீலிக்ஸ் றெஜினோல்ட் டயஸ் பண்டாரநாயக்க ஆகிய நான், சில கிராமப் தேசங்களில் தற்போதுள்ள வட்டாரங்களை இணைத்து உட்பிரிவினை செய்வது சம்பந்தமாக 1973 மார்ச்சு 30 ன் 53 ம் இலக்கக் கசெற்றில் பிரசுரிக்கப்பட்ட அறிவித்தலை, அவ்வறிவித்தல், ஹேனரத்தொட, அதிகாரிபற்று, வெலிகம், தெனியாய, மித்தேனிய, கிரம, பிலெஸ்ஸ, மொறகொல்லாகம ஆகிய கிராமப் பிரதேசங்கள் சம்பந்தப்பட்டவரை, அதனகத்துள்ள (2) ஆம் பந்தியின் (அ) ஆம் உப பந்தியிலுள்ள "1973 ஆம் ஆண்டு" என்னும் இலக்கங்களுக்கும் சொற்களுக்கும் பதிலாக "1974 ஆம் ஆண்டு" என்னும் இலக்கங்களையும் சொற்களையும் இடுவதன் மூலமும் 2 ஆம் பந்தியின் (ஆ) ஆம் உப பந்தியிலுள்ள "1973 யூலை" என்னும் இலக்கங்களுக்கும் சொல்லுக்கும் பதிலாக "1974 யூலை" என்னும் இலக்கங்களையும் சொல்லையும் இடுவதன் மூலமும் இவ்வறிவித்தல் வாயிலாகத் திருத்துகிறேன்.

எவ். ஆர். டீ. பண்டாரநாயக்க,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சர்.

கொழும்பு,
16.8.1973

9–13—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

### (265 ஆம் அத்தியாயமான) உள்ளூராட்சி (நிர்வாகப் பிராந்தியங்கள்) கட்டளைச் சட்டம்

பின்வரும் நியமனங்கள் செய்யப்பட்டுள்ளனவென்பதை இத்தால் அறிவிக்கப்படுகின்றது :—

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஜீ. டீ. த சில்வா 1973 மாச்சு 15 ந் திகதி முதல் மேற்கொண்டு கட்டளைகள் விடுக்கப்படும்வரை கொழும்புப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. ஆர். கே. எச். எம். பர்ணுந்து 1973 மாச்சு 15 ந் திகதிமுதல், மேற்கொண்டு கட்டளைகள் விடுக்கப்படும்வரை இரத்தினபுரிப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

இலங்கை நிர்வாகச் சேவையின் III ஆம் வகுப்பைச் சேர்ந்த திரு. பி. எம். பேமதிலக 1973 மாச்சு 15 ந் திகதி முதல் மேற்கொண்டு கட்டளைகள் விடுக்கப்படும்வரை பொலன்னறுவைப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளராக.

உள்ளூராட்சித் திணைக்களத்தைச் சேர்ந்த I ந் தர ஆய்வு உத்தியோகத்தர் திரு. ரீ. பீ. வர்ச்கோன் 1973 மாச்சு 15 ந் திகதி முதல் மேற்கொண்டு கட்டளைகள் விடுக்கப்படும்வரை மொனருகலைப் பிராந்தியத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பதவியில் பதிற் கடமையாற்றுவதற்கு.

டீ. இராஜேந்திரா,
மேலதிகச் செயலாளர்,
அரசாங்க நிர்வாகம், உள்ளூராட்சி,
உள்நாட்டலுவல்கள் அமைச்சு.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஓகஸ்ட் மீ 23 ந உ.

9–16—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

**வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்
அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்**

**எதிர்வரும் வாராந்த** வர்த்தமானிகள் **பிரசுரிக்கப்படும் திகதிகள்,** வர்த்தமானி அறிவித்தல்கள் **ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது.** வர்த்தமானியில் **பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப்** பிந்திக் **கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.**

***அரசாங்க அச்சுத் திணைக்களம்,***
**கொழும்பு,**
**1972 ம் ஆண்டு மே மீ 5 ந உ.**

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
***அரசாங்க அழுத்தகர்.***

### கல்முனை பட்டின சபை

பட்டின சபைகள் கட்டளைச் சட்டம்

1973 ம் ஆண்டுக்கான விசேட மலகூட வரி

(256 ம் அத்தியாயமான) பட்டின சபைகள் கட்டளைச் சட்டத்தின் 129 (ஆ) என்னும் பிரிவின் கீழும் அவருக்குக் கையளிக்கப்பட்ட தத்துவங்களைக் கொண்டு உள்ளூராட்சி ஆணையாளரினுற் கொடுக்கப்பட்ட அங்கீகாரத்துடனும் துணைவிதிகளினுல் விதிக்கப்படக்கூடியவாறன அத்தகைய வரையறைகளுக்கும் விலக்களிப்புகளுக்கும் அமைவாக கல்முனைப் பட்டினத்தினுள் அமைந்துள்ள அசைவற்ற ஆதனங்கள் அனைத்தினதும் வருடாந்தப் பெறுமதியின் நூற்றுக்கு நான்கு வீதமானதும் முறையே செத்தெம்பர் 30, திசெம்பர் 31 ஆகிய திகதிகளில் இரண்டு தவணைகளில் சமதொகைகளாகச் செலுத்தப்படற்பாலதுமான ஒரு விசேட மலகூட வரியை 1973 ம் ஆண்டுக்குக் கல்முனைப் பட்டின சபை விதித்துள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

டபிள்யூ. ஈ. வி. எஸ். டி அல்விஸ்,
உள்ளூராட்சி ஆணையாளர்.

கொழும்பு,
1973 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 06 ந உ.

9–20—07.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 76

---

### யாழ்ப்பாண மாவட்டத்திலுள்ள மயிலிட்டி கிராமசபையின் வட்டாரங்கள் மீளப்பிரிக்கும் யோசனை

பின்வரும் விடயத்தை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக :—

| | | |
|---|---|---|
| (1) திரு. க. நல்லைநாதன் (அவர்களின் தலைமையில்) | .. | உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் |
| (2) திரு. என். அமுதசாகரன் | .. | வலி வடக்கு பெரும்பாக இறை வரி உத்தியோகத்தர், தெல் லிப்பளை |
| (3) திரு. கே. இராசரத்தினம் | .. | நில அளவை உதவி அத்தியட்சகர், நில அளவை அலுவலகம், யாழ்ப்பாணம் |

ஆகிய மூவரையும் கொண்ட உத்தியோகபூர்வமான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது.

மயிலிட்டி கிராமசபையின் வட்டாரங்களை மீளப்பிரிப்பது சம்பந்தமாகத் தங்கள் அபிப்பிராயங்களைச் சாதகமாகவோ அன்றி பாதகமாகவோ கூறவிரும்பும் ஸ்தாபனங்கள், பொதுமக்கள், தங்களின் அபிப்பிராயங்களை முப்பிரதிகளில் பதிவுத் தபால் மூலம் 1973.09.25 ம் திகதிக்கு முன் கிடைக்கக்கூடியதாக யாழ்ப்பாணம் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அனுப்பிவைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

க. நல்லைநாதன்,
உத்தியோக பூர்வமான குழுத் தலைவரும்
உள்ளூராட்சி உதவி ஆணையாளரும்.

உள்ளூராட்சிப் பணிமனை,
யாழ்ப்பாணம்,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 25 ந உ.

9–19—07.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 76

---

### கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டம்

13 ம் பிரிவின் கீழான அறிவித்தல்

1961 ம் ஆண்டின் 60 ம் இலக்கக் கிராமாட்சி மன்றங்கள் (திருத்தம்) அதிகாரச் சட்டத்தால் திருத்தப்பட்ட கிராமாட்சி மன்றங்கள் கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 257) 13 (1) ம் பிரிவால் எனக்களிக்கப்பட்ட அதிகாரங்களைக் கொண்டு, திருகோணமலை உள்ளூராட்சித் துணை ஆணையாளர், பேட்றம் ஆர்னல்ட் ஜெயராஜா காசிநாதர் ஆகிய நான், திருகோணமலை மாவட்டத்துச் சாம்பல்தீவுக் கிராமாட்சி மன்றத்தின் 6 ம் வட்டார உறுப்பினர், திரு. செல்லையா சுப்பிரமணியம், அவருடைய தெரிவின் பின்னர், சபைக்கு அறிவிக்காமல், சபையின் அடுத்தடுத்த மூன்றுக்கு மேற்பட்ட கூட்டங்களுக்கு செல்லவில்லை என்பதைத் திருப்திகரமாக அறிந்து, திருகோணமலை மாவட்டத்துச் சாம்பல்தீவு கிராமாட்சி மன்றத்தின் 6 ம் வட்டார உறுப்பினர், திரு. செல்லையா சுப்பிரமணியம், இவ்வறிவித்தல் இலங்கைக் குடியரசு செய்தி மடலில் வெளியிடப்படும் திகதியிலிருந்து தனது பதவியை விட்டு நீங்கியுள்ளார் என்பதை இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பே. ஆ. ஜெ. காசிநாதர்,
உள்ளூராட்சித் துணை ஆணையாளர்.

உள்ளூராட்சிப் பணிமனை,
நகர மண்டபம்,
திருகோணமலை,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 27 ந உ.

9–127—07.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 76

---

## பதவிகள் – வெற்றிடம்

**" இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை " யின் IV ஆம் பகுதியின் விளம்பரப்படுத்தப்படும் உள்ளூராட்சிச் சேவைப் பதவிகளின் நியமனங்களுக்குப் பொருந்தும் பொது நிபந்தனைகள்**

**படிகள்.**—அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் விதிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்கத் திருமணப்படி கொடுக்கற்பாலது.

**2. சேவை நிபந்தனைகள்.**—1969 ம் ஆண்டின் 18 ஆம் இலக்க உள்ளூராட்சிச்சேவை அதிகாரச் சட்டத்திற்கும், உள்ளூராட்சிச் சேவைப் பிரமாணங்களுக்கும், அதிகார சபை காலத்திற்குக் காலம் விதிக்கும் மற்றும் எதும் நிபந்தனைகளுக்கும் உட்பட்டதாகவே நியமனங்கள் அமையும்.

**3. நியமன விதிகள்.**—(அ) உ. ஆ. சேவையில் மாதாந்தச் சம்பளம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல உத்தியோகத்தர்களும் உ. ஆ. சே. சகாயநிதிக்கு கட்டுப்பணம் செலுத்த வேண்டும். ஊழியர் தமது திரட்டிய வேதனத்தில் 6 சதவிகிதத்தைச் செலுத்துமாறு வேண்டப்படுவார். ஊழியர் நியமிக்கப்படும் உள்ளூராட்சி மன்றம், அவர் பொருட்டு இந்நிதிக்கு அவரது திரட்டிய வேதனத்தின் 9 சத விகிதத்தைச் செலுத்தும்.

(ஆ) அரசாங்கத்தின் கீழ் சேவையிலிருக்கும் உத்தியோகத்தர்கள் அரசாங்க இளைப்பாற்றுச் சம்பளம் பற்றிய விதிகளின் 21 வது பிரிவின் படி விடுவிக்கப்பட்டு, உள்ளூராட்சிச் சேவையில் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளுக்கு இடமாற்றப்பட்டால், அவர்களின் இளைப்பாற்றுச் சம்பள உரிமைகள் பாதுகாக்கப்படும். உள்ளூராட்சிச் சேவையில் ஒரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும் பதவியை வகிக்கும் எந்தவொரு ஊழியரும் அச் சேவையில் வேறொரு இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிக்கு அவர் பதவியுயர்த்தப்பட்டால் அல்லது நியமிக்கப்பட்டால், அவர் நியமிக்கப்பட்ட அல்லது பதவியுயர்த்தப்பட்ட புதிய பதவியிலும் அவர் தொடர்ந்து இளைப்பாற்றுச்சம்பள உரிமைகளைப் பெறுவார்.

(இ) உள்ளூராட்சித் தாபனங்களில் அவற்றின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்கள் அல்லது விதிகளின் கீழ் இளைப்பாற்றுச் சம்பளத்திற்குரிய பதவிகளை வகிப்பவர்கள் விடயத்தில், அவர்கள் கடைசியாக இளைப்பாறும் போது கொடுக்கப்படும் இளைப்பாற்றுச் சம்பளம், 1969 ம் ஆண்டின் 18 ம் இலக்க உள்ளூராட்சிச் சேவைக் கட்டளைச் சட்டத்தின் கீழ் உள்ளூராட்சிச் சேவைக்கு அவர்கள் மாற்றப்பட்ட திகதிக்கு நேர்முந்தியுள்ள திகதியன்று எந்த உள்ளூராட்சித் தாபனத்தில் வேலை பார்த்தவர்களோ அந்த உள்ளூராட்சித் தாபனத்தின் இளைப்பாற்றுச் சம்பள விதானங்களுக்கு அல்லது விதிகளுக்கு அமைவாக இருக்கும்.

(ஈ) உள்ளூராட்சிச் சேவையில், மாதாந்த வேதனம் பெறும் பதவிகளுக்கு நியமிக்கப்படும் ஊழியர்களுக்கு, விதவைகள் அனாதைகள், இளைப்பாற்றுச் சம்பளத்திட்டம் பொருந்தமாட்டாது. எவ்வாறுயினும் பெண்களும் 55 வயதுக்குமேற்பட்ட உத்தியோகத்தர்களும், உள்ளூராட்சிச் சேவைக்கு நியமிக்கப்படுவதற்கு நேர்முந்திய தேதியில், அரசாங்க சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவிகளை வகித்தவர்களும் தவிர, உ. ஆ. சேவையில் இளைப்பாற்றுச்சம்பளம் பெறும் பதவி ஒன்றிலிருந்து அச்சேவையில் வேறொரு இளைப்பாற்றுச் சம்பளம் பெறும்

பதவிக்கு நியமிக்கப்படுபவர்கள் அல்லது பதவியுயர்த்தப்படுபவர்கள் 1952 ம் ஆண்டு ஜூலை 30 ந் திகதி வெளியான 10,329 இலக்க அரசாங்க விசேட வர்த்தமானியிற் பிரசுரிக்கப்பட்ட 1952 ம் ஆண்டின உள்ளூராட்சிச் சேவை விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச் சம்பள நிதிப்பிரமாணங்களின்படி, ஸ்தாபிக்கப்பட்ட உ. ஆ. சே. விதவைகள், அநாதைகள் இளைப்பாற்றுச்சம்பள நிதிக்கு, தங்களது கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 4 சத விகிதத்தைச் செலுத்த வேண்டும். குறித்த உள்ளூராட்சிமன்றம், கருதப்படும் அடிப்படைச் சம்பளத்தின் 3 சத விகிதத்தைச் செலுத்தும்.

(உ) நியமிக்கப்படுபவர்கள் குறித்த உள்ளூராட்சித் தாபனம் நிர்ணயிக்கும் தொகைக்கு ரொக்கமாக அல்லது உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை அங்கீகரிக்கும் உத்தரவாதச் சங்கம் ஒன்றின் மூலமாக நம்பிக்கை உத்தரவாத முறிகொண்டு பிணை செலுத்துமாறு வேண்டப்படலாம்.

(ஊ) உள்ளூராட்சிச் சேவையில், அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்காதவர்களாயிருந்து நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலேனும் சேவை செய்வதற்கு வேண்டிய தேக தகுதியுடைமை பற்றி முறையான தகைமை பெற்ற வைத்தியர் ஒருவரின் வைத்திய பரிசோதனையில் சித்தியெய்துமாறு வேண்டப்படுவர்.

(எ) வேறுவிதம் குறிக்கப்பட்டாலன்றி நியமனம் பொதுவாக மூன்றாண்டு காலத்துக்கு தகுதிகாண் நிலையில் இருக்கும். அல்லது மூன்றாண்டு காலத்துக்குப் பின்னர் உறுதிப்படுத்துவதற்கு அமைவானதாக இருக்கும்.

(ஏ) விண்ணப்பதாரர்கள், வேண்டப்படும் நேரத்தில் தங்களுடைய பிறப்புச்சான்றிதழ்களையோ, அல்லது அதற்குப் பதிலாகத் தங்களுடைய உண்மையான வயதைக் குறிக்கும் சான்றிதழ்களையோ காட்டுவதற்கு ஆயத்தமாக இருத்தல் வேண்டும்.

(ஐ) நியமிக்கப்படுபவர்கள் இலங்கையின் எப்பகுதியிலாயினும் சேவை செய்தல் வேண்டும்.

4. உள்ளூராட்சிச் சேவைக்குப் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்.—(1) எப்பதவிக்கேனும் நீடியகாலம் விதிக்கப்பட்டாலன்றி சந்தர்ப்பத்திற்கேற்ப, இளைப்பாற்றுச் சம்பளமுள்ள பதவிகளின்/இளைப்பாற்றுச் சம்பளமில்லாத பதவிகளில் நியமிக்கப்படும் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்களின்" தகுதிகாண் நிலை/பரீட்சார்த்த காலம் மூன்று ஆண்டுகளாக இருக்கும்.

(2) புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் அரசாங்கத்தின் மொழிக் கொள்கையை விளைப்படுத்துவதற்கு ஏதுவாக 1956 ம் ஆண்டின் 33 ஆம் இலக்க அரசாங்க மொழிச்சட்ட ஏற்பாடுகளுக்கும் இனிமேல் ஆக்கப்படும் சட்டங்கள், விதிகளுக்கும் அமைந்தொழுகுவார்களென்ற நிபந்தனைகளுக்குட்படல் வேண்டும்.

(3) தமது கடமைகளைத் திறம்பட ஆற்றுவதற்கு அத்தியாவசியமற்ற புறநடையான சந்தர்ப்பங்களில் ஒழிய அவர்கள் தங்களுடைய தகுதிகாண்/பரீட்சைகாண் காலத்தில் அரசகரும மொழியில்—சிங்களத்தில் கடமை செய்யும் அறிவு பெறல் வேண்டும்.

(4) தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் அவர்களின் நியமனம் உறுதிப்படுத்தப்படுகின்றமை பிறவற்றோடு, குறிப்பிட்ட கால வரையறைக்குள், க. பொ. த. ப. தரத்திற்கு மேற்படாத நிலைவரையுள்ள, விதிக்கப்பட்ட சிங்களத்தேர்ச்சி சோதனைகளில் சித்தியடைவதைப் பொறுத்திருக்கும். குறிக்கப்பட்ட காலத்துள் இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடையத் தவறினால், சோதனைகளில் தேறும்வரை அவர்களுக்குரிய வேதனம் பெருக்கங்கள் செலுத்தப்படமாட்டாது. சிங்களத்தில் தேர்ச்சியடைய வேண்டிய தரத்தை அடையாத உத்தியோகத்தர்களின் சேவைகள், அவர்களின் தகுதிகாண்/பரீட்சைகாண் காலமுடிவில் நிறுத்தப்படலாம்,

(5) கல்வியும் ஏனைய தகைமைகளும்.—சி. பா. த. ப. பரீட்சை அல்லது அதற்கு சமமான அல்லது உயர்ந்த பரீட்சை ஆகக் குறைந்த தகைமை என்று விதிக்கப்பட்ட எல்லாச் சேர்வுத் திட்டங்களிலும், சிங்கள மொழியில் கல்விபயின்ற, சிங்களப் பரீட்சார்த்தி சிங்கள பாஷையில் அல்லது அதற்குச் சமமானதில் சிரேஷ்ட பாடசாலைத் தராதரப் பத்திரம் அல்லது அதற்குச் சமமான பரீட்சையில் சித்தியடைந்திருக்க வேண்டும்.

(1963 ம் ஆண்டு பெப்ரவரி மாதம் 8 ம் திகதிக்கு முன்னர் தொடக்கம் உள்ளூராட்சிச் சேவையிலிருந்துவரும் உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள வேறு பதவிகளுக்கு நியமனம் பெறவிரும்புவர்களுக்கும் இந்தத் தகைமை பொருந்தாது).

குறிப்பு —(1) சிங்களமொழி மூலம் உள்ளூராட்சி சேவையில் புகும் தகைமைபெறும் புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள் உறுதிப்படுத்துவதற்கு ஒரு முன்தேவையாக இத்தேர்ச்சிச் சோதனையில் சித்தியடைவதிலிருந்து விலக்குப்பெறுவர்.

குறிப்பு.—(2) இதில் "புதிதாகச் சேரும் உத்தியோகத்தர்கள்" என்பது அரசகரும மொழிக் கொள்கையின் நோக்கத்தின்படி 1960 ம் ஆண்டு ஜனவரி மாதம் 29 ஆம் திகதியன்று அல்லது அதற்குப் பின்னர் பிரசுரமாகும் விளம்பரங்களின் மூலம் உள்ளூராட்சிச் சேவையிலுள்ள பதவிகளில் நியமிக்கப்படும் உத்தியோகத்தர்களுக்கும் பொருந்தும்.

குறிப்பு —(3) 4 (3) ஆம், (4) ஆம் பந்திகளில் உள்ள ஏற்பாடுகள் அரசாங்க அலுவலகங்களில் கடமையாற்றும் முன்சேர்ந்த உத்தியோகத்தர்களுக்கும், உள்ளூராட்சிச் சேவையிலுள்ள நியமனங்களை ஏற்பதற்காகப் பதவியிலிருந்து விடுவிக்கப்பட்டவர்களுக்கும் பொருந்தாது.

5. ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தாம் இலங்கையர் என்பதைத் திருப்திகரமான முறையில் நிரூபிக்க வேண்டும். "இலங்கையர்" என்பது வம்சாவழியாகவோ பதிவு செய்ததாலோ இலங்கைப் பிரசையாக இருப்பவராகும்.

6. போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்களுக்கான சலுகை.—(அ) விண்ணப்பிக்கப்பட்ட பதவிகளுக்கு விதந்துரைக்கப்பட்ட மிகக் கூடிய வயது எல்லைக்குள் தம்மைக் கொண்டுவர உதவும் விதத்தில் தமது வயதிலிருந்து மொத்தமான படையிற் தாம் ஆற்றிய சேவையைக் கழிப்பதற்கு, போர்ப்படையிற் சேவை செய்த முன்னாள் வீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

(ஆ) எந்தப் பதவிகளுக்குமுரிய புதிய நியமனத் திட்டத்தில் விதந்துரைக்கப்பட்ட மிகக் குறைந்த கல்வித்தகைமையிலிருந்து, அதேதுக்குறைவான பரீட்சையைத் தமது மிகக் குறைந்த கல்வித் தகைமையாகக் கருதுவதற்குப் போர்ப்படைவீரர்கள் அனுமதிக்கப்படுவர்.

7. வயதெல்லை.—இருவருட தொடர்ச்சியான சேவையுள்ள நிரந்தரப் பதவி வகிக்கும் உள்ளூராட்சி மன்ற ஊழியர்கள், உள்ளூராட்சி சேவையிலுள்ள பதவிகள் விளம்பரப்படுத்தப்படும் போது வயது எவ்வாறிருப்பினும் விண்ணப்பிப்பதற்குத் தகுதியுடையவராவர்.

8. வேண்டற்பாலன ஏனையவை.—(1) உள்ளூராட்சித் தாபனமொன்றில் கடமையாற்றுபவர்களின் விண்ணப்பங்கள், அவர்கள் கடமையாற்றும் உள்ளூராட்சித் தாபனத்தின் காரியதரிசி/ஆணையாளர் அல்லது தலைவர் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(2) அரசாங்க சேவையில் இருக்கும் உத்தியோகத்தர்களின் விண்ணப்பங்கள் அவ்வப்பகுதிகளின் தலைவர்கள் மூலமாக அனுப்பப்படுதல் வேண்டும். அரசாங்க சேவையில் நிரந்தர பதவியை வகிக்கும் உத்தியோகத்தர்களுடைய விண்ணப்பங்களின் விடயத்தில், விண்ணப்பகாரர் தெரிவுசெய்யப்படின் அவரை விடுதற்குத் தாம் தயாரா? இல்லையா? என்பதைச் சம்பந்தப்பட்ட பகுதியின் தலைவர் விண்ணப்பத்தை அனுப்பும்போது குறிப்பிடுதல் வேண்டும்.

(3) குறிக்கப்படும் ஒரு நேரத்திலும் இடத்திலும், நேர்முகப் பரீட்சைக்கோ, பரீட்சைக்கோ தோற்றுமாறு அபேட்சகர்கள் வேண்டப்படலாம். இதன் பொருட்டு பிரயாணச் செலவுகளோ வேறு செலவுகளோ கொடுக்கப்படமாட்டாது.

(4) அபேட்சகர் ஒருவரைச் சிபார்சு செய்ய விரும்பும் எவரும் ஒரு குணச்சான்றிதழைக் கொடுப்பதன் மூலம் அதனைச் செய்யலாம். அபேட்சகர் ஒருவருக்குச் சாதகமாக நேர்முகமாகவேனும் மறைமுகமாகவேனும் எவ்விதமான ஆதரவும் தேடுதலேனும் அபேட்சகர்கள் தெரிந்தெடுப்பதற்கு எந்தவிதமான முயற்சியும் செய்தலேனும் அவ்வபேட்சகர்களுக்குத் தகைமையின்மையை உண்டாக்கும்.

(5) விண்ணப்பத்தில் உள்ள கூற்றெதுவும் செம்மையற்றதென்று தெரிவிற்கு முன்னர் காணப்படின் விண்ணப்பதாரருக்கு தகைமையீனத்தை உண்டாக்கும்; தெரிவிற்குப் பின்னர் காணப்படின் அவர் வேலையிலிருந்து நீக்கப்படுவதற்குப் பாத்திரராவர்.

(6) இவ்விளம்பரத்தில் வேண்டப்படுவனவற்றுக்கு சகல வகைகளிலும் இணக்கமாயில்லாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

(7) "கீழே இணைக்கப்பட்ட படிவத்தில்" விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும். நேரடியாக அவருடைய பெயருக்கு அவை அனுப்பப்படக்கூடாது.

(8) முடிவுத் திகதிக்குப் பின்னர் இக்கந்தோரில் பெற்றுக்கொள்ளப்படும் விண்ணப்பங்கள் சாதாரணமாக ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. விண்ணப்பம் தபாலிற் காணாமற்போய்விட்டதோ அல்லது தாமதமாகிவிட்டதோ என்ற குற்றச்சாட்டுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா. கடைசி நாட்கள் வரை தமது விண்ணப்பங்களை அனுப்பாமல் வைத்திருக்கும் பரீட்சார்த்திகள் தாமாகவே விளைவைத் தேடிக்கொள்கின்றனர்.

### வேறுவிதம் கூறப்பட்டாலன்றி உபயோகிக்கப்பட வேண்டிய விண்ணப்ப மாதிரிப் பத்திரம்

#### உள்ளூராட்சிச் சேவை

முக்கியமாகக் கவனிக்க.—(1) விண்ணப்பத்தைக் கீழே விதித்துள்ள முறையில் எழுதி பதவி பற்றிய வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலில் சொல்லப்படும் விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான கடைசித் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் செயலாளர், உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை, தபாற் பெட்டி 530, கொழும்பு என்ற விலாசத்தை அடையும் வண்ணம் அனுப்புதல் வேண்டும். விண்ணப்பத்தை செயலாளரின் பெயருக்கு விலாசமிட்டு அனுப்பலாகாது.

(2) விண்ணப்பகாரர் தமது விண்ணப்பங்களை, தயார் செய்யுமுன்னர் மேற்கூறிய பொது நிபந்தனைகளையும் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலின் வேண்டுதலையும் கவனமாக வாசித்து விண்ணப்பிப்பதற்குத் தாங்கள் சகல வகைகளிலும் அருகதையுடையவர்கள்தான் என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டுமென்று ஆலோசனை கூறப்படுகின்றது. விண்ணப்பகாரர் வர்த்தமானப் பத்திரிகை அறிவித்தலை உசாவி, உரிய சகல தகவல்களையும் தவறாது கொடுக்கவேண்டும்.

(3) விண்ணப்பக்காரர் கீழ்க்காணும் பத்திரங்களின் பிரதிகளை அவர்களின் விண்ணப்பத்துடன் இணைக்க வேண்டும்.—(1) ஆங்கிலத்தில்/சிங்களத்தில்/தமிழில் சித்தியெய்திய ஆக உயர்ந்த பரீட்சைச் சான்றிதழ், (2) குணச் சான்றிதழ், (3) பதவி அத்தகைய தன்மையதாயின் உயர் தொழில்/தொழில்நுட்பத் தகைமைகளின் சான்றிதழ்.

(4) விண்ணப்பகாரர் மேற்கூறிய பொது நிபந்தனைகளின் 8 ஆம் பந்தியை விசேடமாகக் கவனிக்குமாறு வேண்டப்படுகின்றார்கள்.

......................(........) பதவிக்கான விண்ணப்பம்

1. (அ) வெற்றுப் பதவி விளம்பரப்படுத்தப்பட்டுள்ள வர்த்தமானப் பத்திரிகையின் திகதி : ———.

   (ஆ) ........................பதவிக்கான விண்ணப்பம்.

2. முழுப்பெயர் (தனித்தனி எழுத்துக்களில்) : ———.
   தேசிய இனம் : ———.

   (மேலேயுள்ள 5 ஆம் நிபந்தனையில் கூறப்பட்டுள்ள வரைவிலக்கணத்தின்படி இலங்கையரா ? இலங்கையரல்லாதவரா ? என்பதைக் கூறுக. நீர் பதிவு மூலம் இலங்கைப் பிரசையாயிருப்பின் பிரசாவுரிமைச் சான்றிதழின் எண்ணையும் திகதியையும் கூறுக.)

3. தபால் விலாசம் : ———
   (விலாசமாற்றமெதுவும் உடனே அறிவிக்கப்பட வேண்டும்.)

4. (அ) விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளுவதற்கான முடிவுத் திகதியில் சரியான வயது : —
   ———வருடங்கள் ———மாதங்கள் ———நாட்கள்.

   (ஆ) பிறந்த திகதி :———. வருடம் :———.
   மாதம் :———. திகதி :———.

5. பிறந்த இடம் :—

   (அ) விண்ணப்பகாரர் : ———.

   (ஆ) அவரது பிதா : ———.

   (இ) அவரது பிதாவழிப் பேரன் : ———.

   (ஈ) அவரது பிதாவழிப் பாட்டன் : ———.
   (விண்ணப்பகாரர் இலங்கையில் பிறந்தவராயின் (அ) வுடன் ஒன்றில் (ஆ) வை அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும். விண்ணப்பகாரர் இலங்கையில் பிறவாதவராயின் (அ) வோடு, ஒன்றில் (ஆ) வையும் (இ) வையும் அல்லது (இ) வையும் (ஈ) வையும் நிரப்புதல் வேண்டும்).

6. விவாகமானவரா ? தனியாளரா ? அல்லது தாரமிழந்தவரா ? கைம்பெண்ணா ? : ———.

7. 12 வயது தொடக்கம் படித்த பாடசாலைகளும், கல்லூரிகளும் மற்றும் தாபனங்களும் : ———.

| பொதுக் கல்வி | | | உயர் தொழில்/தொழில் நுட்ப கல்வி | | |
|---|---|---|---|---|---|
| பாடசாலை அல்லது கல்லூரி | சேர்ந்த திகதி | விட்ட திகதி | தாபனம் | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
| 1 .............. | .......... | .......... | 1. .............. | .......... | .......... |
| 2 .............. | .......... | .......... | 2. .............. | .......... | .......... |
| 3 .............. | .......... | .......... | 3. .............. | .......... | .......... |
| 4 .............. | .......... | .......... | 4. .............. | .......... | .......... |
| 5 .............. | .......... | .......... | 5. .............. | .......... | .......... |

8. கல்வித் தகைமைகள் :—

   (அ) சி.பா.த. பத்திரம்/க.பொ.த.ப. (சாதாரண தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| முதல்தடவை | | | | | |
| இரண்டாம் தடவை | | | | | |

   (ஆ) க.பொ.த.ப. (உயர்தரம்)

| | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் | திறமைச் சித்தி | விசேட சித்தி |
|---|---|---|---|---|---|
| | | | | | |

   (இ) வேறும் கல்வித் தகைமைகள் :—

| பரீட்சையின் பெயர் | பரீட்சையில் சித்தியடைந்த வருடம் | சுட்டிலக்கம் | பாடங்கள் |
|---|---|---|---|
| | | | |

   (ஈ) கீழ் உள்ளவற்றில் சித்தியடைந்த ஆகக்கூடிய பரீட்சை :—
   1. சிங்களம் : ———.
   2. தமிழ் : ———.
   3. ஆங்கிலம் : ———.

9. பெற்றுள்ள ஏதும் உயர் தொழில் அல்லது தொழில் நுட்ப அல்லது இருவகைத் தகைமைகளையும் திகதிகளுடனும் தாபனங்களின் பெயர்களுடனும் தருக : ———.

10. உயர்தொழில்/தொழில்நுட்ப/தொழில் அனுபவங்கள்

| தாபனத்தின் பெயர் | தொழிற் பயிற்சி வகிக்கப்பட்ட பதவியின் தன்மை | சேர்ந்த திகதி | விட்ட திகதி |
|---|---|---|---|
| | | | |

(சான்றிதழ்களின் பிரதிகள் இணைக்கப்படவேண்டும்)

11. (அ) பாடசாலையை விட்டபின்னர் வகித்த உத்தியோகம் (வகித்த பதவிகளை அவற்றில் சேர்ந்த, அவற்றை விட்ட திகதிகளுடன் தருக) : ———.

   (ஆ) நிரந்தரமாகவேனும் தற்காலிகமாகவேனும் அரசாங்கத்திலாவது உள்ளூராட்சித் தாபனத்திலாவது உத்தியோகத்திலிருந்து அந்த உத்தியோகம் எச்சமயத்திலேனும் நிறுத்தப்பட்டிருப்பின், சேவை நிறுத்தப்பட்டமைக்கான காரணத்தை திகதிகளுடன் விபரமாக விளக்குக : ———.

   (இ) உள்ளூராட்சிச் சபைகளில் பார்த்த உத்தியோக விவரம் (பதவி, உள்ளூராட்சித் தாபனம், காலம்) : ———.

(ஈ) தற்போதைய உத்தியோகம் பற்றிய பின்வரும் விபரங்களைக் கூறுக :—

(1) உத்தியோகப் பதவிப் பெயரும் அதன் தரமும் அதில் நியமிக்கப்பட்ட திகதியும் : ————.

(2) தற்போதைய சம்பளமும் (படிகள் நீங்கலாக) சம்பள அளவுத் திட்டமும் : ————.

(3) இளைப்பாற்றுச் சம்பளமுண்டா ? : ————.

(உ) முன்னைநாட் போர்வீரராயின் இருந்த படைப் பிரிவு, வரிசைப் பதவி ஆகியவற்றின் விபரங்களும் சேர்ந்த, விருபட்ட திகதிகளும் : ————.

12. இம்மொழிகளில் வாசிக்கும், எழுதும், பேசும் தேர்ச்சியுண்டா? :—

(அ) சிங்களம் : ————.

(ஆ) தமிழ் : ————.

13. விசேட தகைமைகள் (விளம்பரத்தில் குறிப்பிடப்பட்ட விசேட தகைமைகள் அல்லது அனுபவம் இவை இரண்டும் உமக்குண்டா உண்டெனில், அவற்றின் முழு விபரங்களையும் திகதிகளுடன் தருக : ————.

14. ஒரு நீதிமன்றத்தில் ஏதும் கிறிமினல் குற்றத்தின் பொருட்டு தண்டிக்கப்பட்டதுண்டா ? உண்டெனில், அவ்வழக்கின் திகதியையும் இலக்கத்தையும் குற்றத் தீர்ப்பின் தன்மையையும் தருக : ————.

15. கடன் தொல்லையில்லாதிருக்கின்றீரா ? இல்லையாயின் எவ்வளவுக்குக் கடனாளியாக இருக்கின்றீர் ? : ————.

16. வேறு ஏதும் விபரங்கள் (விசேட உரிமைக் கோரிக்கைகள் ஆதியன) : ————.

17. யார் யாரிடமிருந்து குணச் சான்றிதழ்கள் பெறப்பட்டிருக்கின்றனவோ அவர்களின் பெயர்களும் உத்தியோகப் பதவிப் பெயர்களும் (அச்சான்றிதழ்களின் மூலப்பிரதிகளை இணைக்காது நகல் பிரதிகளை இணைத்தல் வேண்டும். அட்டவணைப்படுத்தப்பட்ட பதவிகளை வகிக்கும் உள்ளூராட்சிச் சேவை அங்கத்தவர்கள் இந்த வேண்டுதலை நிறைவேற்றவேண்டியதில்லை) : ————

விண்ணப்பத்தில் நான் தந்துள்ள விபரங்கள் உண்மையானவையென்றும் செம்மையானவையென்றும் நான் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன். இதிலடங்கியுள்ள விபரங்களெதுவும் பொய்யானவை அல்லது செம்மையில்லாதவை எனக் காணின், தெரிவுக்கு முன்னர் தகைமை நீக்கத்துக்கும், நியமனத்துக்குப் பின்னர் அச் செம்மையின்மை கண்டுபிடிக்கப்படின், எனக்கு நட்டஈடு எதுவுமின்றி வேலை நீக்கத்துக்கும் நான் பாத்திரமாவேன் என்பதையும் நான் அறிவேன்.

————,
விண்ணப்பகாரரின் கையொப்பம்.

திகதி : ————.
செயலாளர் அவர்கட்கு,
உள்ளூராட்சிச் சேவை அதிகார சபை,
தபால் பெட்டி 530, கொழும்பு 1.

---

## உள்ளூர் ஆட்சிச் சேவை

### தரம் III வேலைகள் அத்தியட்சகர்கள் பதவிகள்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அடிப்படை வருமாறு.—வருடாந்தம் ரூ. 4,296—10×144—5,736. ரூ. 4,872 பெறுமுன் வினைத் திறமைகாண் தடையுண்டு.

3. தகுதி.—(அ) விண்ணப்பதாரர்கள் நற்பண்புடையவர்களாய் இருத்தல் வேண்டும் ;

(ஆ) விண்ணப்பதாரர்கள் இலங்கையராய் இருத்தல் வேண்டும் ;

(இ) 10.10.73 ல் விண்ணப்பதாரர்கள் 40 வயதுக்கு அதிகமில்லாதிருத்தல் வேண்டும் ;

(ஈ) விண்ணப்பதாரர்கள் பின்வருவனவற்றுள் ஒன்றை உடைமையாய் கொண்டிருத்தல் வேண்டும் :—

(1) கனிஷ்ட தொழில்நுட்ப உத்தியோகத்தர்களுக்கான (சிவில்) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ், அல்லது

(2) மாநகரப் பொறியியலில் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ், அல்லது

(3) கட்டட நிருமாணத்தில் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு) இலங்கை தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ், அல்லது

(4) (ஸ்ரக்ஷரல் இஞ்சினியரிங்) அமைப்பு பொறியியலில் (3 வருட மாலைப் பயிற்சி வகுப்பு) இலங்கைத் தொழில்நுட்பக் கல்லூரியின் இறுதிச் சான்றிதழ் ;

(5) உப-பரிசோதகர்கள் தரத்துக்குப் பொது மராமத்துத் திணைக்கள மேற்பார்வை செய்யும் ஓவசியர்களுக்கான திணைக்களத்துப் பதவியுயர்வுப் பரீட்சை, அல்லது

(6) சமமான அல்லது உயர்வான பரீட்சை.

(உ) அரசாங்கத்தின் கீழ் அல்லது உள்ளூராட்சிச் சேவையின் கீழ் விண்ணப்பதாரருக்கு ஐந்து வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

மேற்படி வேதன அடிப்படையில் அமர்த்தப்படுவதற்கு, சிவில் பொறியியல் 3 வருட செய்முறை அனுபவம் விண்ணப்பதாரர்களுக்கு இருத்தல் வேண்டும்.

4. 3 வருடங்களுக்குக் குறைந்த செய்முறை அனுபவம் உள்ள விண்ணப்பதாரரின் வேதனம் வருமாறு :—

| | | ரூபா |
|---|---|---|
| 2 வருட செய்முறை அனுபவம்—வருடாந்தம் | .. | 4,152 |
| 1 வருட செய்முறை அனுபவம்—வருடாந்தம் | .. | 3,864 |
| செய்முறை அனுபவம் இல்லாவிடின்—வருடாந்தம் | .. | 3,720 |

5. குறிப்பிட்ட வருடங்களுக்கு உள்ளூராட்சி மன்றத்தில் சேவை செய்வதாக முறியில் அல்லது ஒப்பந்தத்தில் கையொப்பமிட்ட, உள்ளூராட்சி மன்றத்தில் ஊழியத்திலுள்ள உத்தியோகத்தர்கள் தரம் III, மராமத்து அத்தியட்சகர்களாகத் தேர்ந்தெடுக்கப்படும் பட்சத்தில், முறி அல்லது ஒப்பந்தத்தில் நிபந்தனைகளைப் பூர்த்தி செய்யும் நிலையிலிருந்தால் மாத்திரமே விண்ணப்பிக்க வேண்டும்.

6. வயது எவ்வாறுயிருப்பினும், உரிய தொழில்நுட்பத் தகைமைகள் இருக்கும், உள்ளூராட்சிச சேவை உத்தியோகத்தர்களின் விண்ணப்பம் கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படும். இத்தகைய பரீட்சார்த்திகளிடமிருந்து வரும் விண்ணப்பங்கள், தாம் கடமைபார்க்கும் உள்ளூராட்சி மன்ற ஆணையாளர், தலைவர் ஊடாகச் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.

7. தபாலில் விண்ணப்பம் தாமதமாகிவிட்டது, காணாமற்போய்விட்டது என்ற குற்றச்சாட்டு கருத்துக்கு எடுத்துக்கொள்ளப்படமாட்டாது. கடைசி தினங்கள் வரை தமது விண்ணப்பங்களைத் தாமதிக்கும் பரீட்சார்த்திகள் தமது சொந்தச் செயலின் பேரிலேயே தாமதிப்பவராவர்.

8. இவ்வர்த்தமானியின் IV வது பகுதியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவையிலுள்ள பகுதிகளுக்கான நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கும்படி வேண்டப்படுகின்றது.

9. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்ட மாதிரி விண்ணப்பங்கள் எழுதப்பட்டு 10.10.73 க்குப் பிந்தாமல் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும்.

10. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான கடிதத் தொடர்புகளும் உள்ளூர் ஆட்சிச்சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரி இடப்பட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாக அனுப்பப்படக்கூடாது.

11. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ் உத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை மாநகர சபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபாரசு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

12. வேண்டிய தகைமைகளையுடைய உள்ளூராட்சிச் சேவை ஊழியர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

எட்கார் பர்னாந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை,
த. பெ. இல. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 24 ந் தி.

9—24—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

## உள்ளூராட்சிச் சேவை

### சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பதவிகள்

மேற்படி பதவிகளுக்கான விண்ணப்பங்கள் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபையினுல் கோரப்படுகின்றன. நியமனத்துக்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் இடமாற்றப்படத்தக்கவராவார்கள்.

2. நியமனத்திற்குத் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் வசித்தல் வேண்டும். சொந்தத்தில் தொழில் நடத்துவதிலிருந்து அவர் தடுக்கப்படுவார்.

3. **இப்பதவிக்குரிய திரட்டிய வேதன அடிப்படை வருமாறு.**—வருடாந்தம் ரூபா 9,600—4 × 360—10 × 480—3 × 600—ரூபா 17,640. வருடாந்தம் ரூபா 14,400 பெறும் முன்னர் வினைத்திறமைகாண் தடையுண்டு. டி. பி. எச். தகைமை இல்லாத ஒரு உத்தியோகத்தர் வருடாந்தம் ரூபா 13,920 பெறும் வேதனப் படிக்கு அப்பால் செல்லமாட்டார்.

4. **வேண்டிய தகைமைகள்.**—விண்ணப்பதாரர்கள் எம்.பி.பி.எஸ். (இலங்கை) அல்லது அதற்குச் சமமான அல்லது உயர்ந்த தகைமையை உடையவராயிருத்தல் வேண்டும். டி.பி.எச். தகைமையுடைய ஒரு விண்ணப்பதாரர் வருடாந்தம் ரூபா 11,520 பெறும் வேதனத்தில் தொடங்குவார்.

**பி. கு.**—அரசாங்க வீதங்கள் நிபந்தனைகளுக்கிணங்க இளைப்பாற்றுச் சம்பளம் அல்லாத படிகள் கொடுக்கப்படும்.

5. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருக்கும் உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

6. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில், விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 08.10.1973 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்கும்படி அனுப்பப்பட வேண்டும். குறிப்பிட்ட படிவத்தில் உள்ள 13 வது அம்சத்துக்குப் பதிலாகப் பின்வருமாறு சேர்க்கப்பட வேண்டும் :—

13. (அ) மருத்துவமும், உயர் தொழிலுக்குரிய தகைமைகள் திகதிகளுடனும், நிலையங்களின் பெயர்களுடனும் ;

(ஆ) பொது சுகாதார வேலையில் அனுபவம் பற்றிய விபரங்கள்.

7. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய கடிதத் தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தருக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

8. அரசாங்க சேவையிலுள்ள அல்லது உள்ளூராட்சி மன்றச் சேவையிலுள்ள உத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதிக்கு முன்னர் தமது விண்ணப்பங்களைத் திணைக்களத் தலைவர், மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சிமன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து திணைக்களத் தலைவர், மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 23 ந் வ.

9-10—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

---

## உள்ளூராட்சிச் சேவை

### உதவி சுகாதார மருத்துவ உத்தியோகத்தர் பதவி

### பிரசவமும் சிசுநலனும்

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபையினுல் கோரப்படுகின்றன. தேர்ந்தெடுக்கப்பட்ட விண்ணப்பதாரர் கொழும்பு மாநகரசபையின் பொது சுகாதாரத் திணைக்களத்தில் முதலில் நியமிக்கப்படுவார்.

2. **வேதனம்.**—இப்பதவிக்குரிய வேதனம் வருமாறு.—வருடாந்தம் ரூபா 9.600—4 × 360—11 × 480—ரூபா 16,320. வருடாந்தம் ரூபா 14,880 பெறும்பொழுது இரண்டு வருட நிறுத்துகை உண்டு. டி. வி. எச். அல்லது டி. ஆர். வி. ஓ. ஜி. அல்லது எம். ஓ. ஜீ. (இலங்கை) இல்லாத ஒரு உத்தியோகத்தர் மேற்படி வேத்னக் கிரமத்தில் வருடாந்தம் ரூபா 14,880 வேதனத்திற்கு அப்பால் செல்லமாட்டார். அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தும் வரிகளுக்கும் நிபந்தனைகளுக்கும் இணங்க ஒரு திருமணப்படியும் கொடுக்கப்படும்.

3. அரசாங்க உத்தியோகத்தர்களுக்குப் பொருந்தக்கூடிய பிரகாரம் இளைப்பாற்றுச் சம்பளம் அல்லாத படிகள் கொடுக்கப்படும்.

4. **ஆகக் குறைந்த வேண்டிய தகைமைகள்.**—எம். பி. பி. எஸ். (இலங்கை) அல்லது அதற்குச் சமமான இலங்கையில் பதியப்படக்கூடிய தகைமைகளை விண்ணப்பதாரர் பெற்றிருத்தல் வேண்டும். பிரசவமும் சிசுநலனும் பற்றிய விசேட அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

5. தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்தி கொழும்பு நகர எல்லைக்குள் வசிக்கும்படி வேண்டப்படுவர். அத்துடன் சொந்தமாக தொழில் நடத்துவதில் இருந்தும் தவிர்க்கப்படுவர்.

6. இவ்வர்த்தமானியின் தொடக்கத்தில் பிரசுரிக்கப்பட்டுள்ள உள்ளூர் ஆட்சிச் சேவைப் பதவி நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

7. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்ட படிவத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் தயாரிக்கப்பட்டு 08.10.1973 க்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்படல் வேண்டும். அதில் உள்ள 13 வது பந்திக்குப் பதிலாக பின்வருபவை சேர்த்துக் கொள்ளப்படல் வேண்டும் :—

13. (அ) மருத்துவமும், உயர் தொழிலுக்குரிய தகைமைகள் திகதிகளுடனும், ஸ்தாபனங்களின் பெயர்களுடனும் ;

(ஆ) பொது சுகாதார வேலையில் பெற்ற அனுபவம் பற்றிய விபரங்கள்.

8. உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை செயலாளருக்கு விண்ணப்பங்களையோ அல்லது மற்றைய் கடிதத் தொடர்புகளையோ விலாசமிட வேண்டுமேயன்றி இத்திணைக்களத்திலுள்ள எந்த உத்தியோகத்தர்களுக்குமோ நேர்முகமாய் அனுப்பக்கூடாது.

9. அரசாங்க சேவையிலோ அல்லது உள்ளூராட்சிச் சேவையிலோ வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களைப் பகுதித் தலைவர், மாநகரச்பை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர், அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோருக்கு சமர்ப்பித்திருந்து அவர்கள் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபார்சு செய்தாலன்றி அவ்வுத்தியோகத்தர்களின் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

10. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி முடிவு திகதிக்குப் பின் 2 வாரங்களுக்குள் அறிவிக்கப்படும்.

எட்கா பர்ணந்து,
செயலாளர்,
உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபை.

த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்டு மீ 23 ந் வ.

9-9—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

**உள்ளூராட்சிச் சேவை**

வடம் பொருத்தி பதவி

மேற்படி பதவிக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன.

2. **வேதனம்.**—வருடாந்தம் ரூ. 3,240—12 × 60—ரூபா 3,960. வருடாந்தம் ரூ. 3,600 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு.

3. **வேண்டிய தகைமைகள்.**—(அ) வயது : 07.10.73 இல் 45 வயதுக்கு மேற்படாதிருத்தல் வேண்டும்.

(ஆ) சிங்களம் அல்லது தமிழில் விண்ணப்பதாரர் 7 ம் வகுப்பில் சித்தியடைந்திருக்க வேண்டும். ஆங்கில மொழியறிவு பயன்தருவதாய் இருக்கும்.

(இ) பின்வருவனவற்றுள் நிறைந்த அறிவும், அனுபவமும் விண்ணப்பதாரருக்கு இருத்தல் வேண்டும். எச். ரி. உம் எல். ரி. உம் ட்ரான்ஸ்போர்மர்கள், சுவிட்ச்கியர்கள், ரிங்மெயின் யூனிட்ஸ்—உப நிலையங்களில் 11 கே. வி. ஆகியவற்றை நிறுவுதல், 11 கே. வி. வரை ஆழ்நில எல். ரி. உம் எச். ரி. உம் வடங்களை அமைத்தலும் பொருத்துதலும், தொழிலாளரைக் கட்டுப்படுத்துதலாகியவை. (அனுபவத்திற்கு அத்தாட்சியாகச் சான்றிதழ்ப் பிரதிகள் இணைக்கப்படல் வேண்டும்.)

4. இந்த அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் ஆரம்பத்தில் வெளியிடப்பட்டிருக்கும் IV வது பகுதியில் உள்ள உள்ளூர் ஆட்சிச் சேவைப் பகுதிகளுக்குரிய நியமனங்கள் சம்பந்தமான பொது நிபந்தனைகளைப் பார்க்கவும்.

5. நியமனங்களுக்குப் பொருத்தமான பொது நிபந்தனைகளுடன் இணைக்கப்பட்டிருக்கும் மாதிரி விண்ணப்பப் பத்திரத்தில் கண்டவாறு விண்ணப்பங்கள் நிரப்பியனுப்பப்பட வேண்டும். 07.10.73 திகதிக்குப் பிந்தாமல் எனக்குக் கிடைக்குமாறு அனுப்பப்பட வேண்டும். பிறப்புச் சான்றிதழ் ஏனைய சான்றிதழ் பிரதிகள் (மூலங்கள் அல்ல) விண்ணப்பத்துடன் இணைக்கப்படல் வேண்டும். இத் தஸ்தாவேஜுகள் இல்லாது வருபவை நிராகரிக்கப்படும்.

6. விண்ணப்பங்களும் அவை சம்பந்தமான தொடர்புகளும் உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டுமேயன்றி, இத்திணைக்களத்திலுள்ள எந்த ஒரு உத்தியோகத்தருக்கும் நேரிடையாக அனுப்பப்படக்கூடாது.

7. உள்ளூராட்சிச் சேவையில் வேலைபார்க்கும் உத்தியோகத்தரிடமிருந்து வரும் விண்ணப்பப் பத்திரங்கள் குறிப்பிட்ட திகதிக்குப் பின்னர் இக்கந்தோருக்கு வந்தால் அவ்வுத்தியோகத்தர்கள் குறிப்பிட்ட திகதியன்றோ அல்லது அதற்கு முன்னரோ தமது விண்ணப்பங்களை அல்லது மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோரிடம் சமர்ப்பித்திருந்து, மாநகரசபை ஆணையாளர், உள்ளூராட்சி மன்றத் தலைவர் ஆகியோர் தாமதத்திற்குரிய உறுதியான காரணங்களைக் காட்டி, விண்ணப்பப் பத்திரங்களை ஏற்றுக்கொள்ள வேண்டும் என்று சிபாரிசு செய்தாலன்றி, அவ்வுத்தியோகத்தர்களின் விண்ணப்பப் பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

8. நியமிக்கப்பட்ட உள்ளூராட்சி மன்ற எல்லைக்குள் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சார்த்திகள் வசிக்க வேண்டப்படுவார்கள்.

9. தகுதியுடைய விண்ணப்பதாரர்களுக்கு மாத்திரம் விண்ணப்பப் பத்திரம் கிடைத்தமை பற்றி அறிவிக்கப்படும்.

எட்கார் பர்ணாந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. சபை.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் திணைக்களம்,
த. பெ. இல. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஓகத்து மீ 24 ந உ.

9–65—07.09.73 ந திகதிய வர்த்தமானி இல. 76

---

# பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும்

**உள்ளூர் ஆட்சிச் சேவை**

உள்ளூர் ஆட்சிச் செயலாளர் சேவையின் தரம் 5 க்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—17.11.1973

கொழும்பில் 17.11.73 இல் நடைபெறவிருக்கும் மேற்படி பரீட்சைக்கான விண்ணப்பங்கள் உள்ளூராட்சிச் சேவை அதிகார சபையினால் கோரப்படுகின்றன. பரீட்சை ஆணையாளரால் பரீட்சை நடாத்தப்படும்.

2. **வேதனமும் சேவை நிபந்தனைகளும்.**—(அ) உள்ளூர் ஆட்சிச் சேவை தரம் 5 செயலாளர் பதவிகளுக்கான வெற்றிடங்கள் வரும் பொழுது அப்பதவிகளுக்குச் சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவார்கள். அவர்களுடைய வேதனம் வருடாந்தம் ரூ. 3,720 ஆக வருடாந்தம் ரூ. 144 ஆக வேதனப் பெருக்கங்களைக் கொண்டு வருடாந்தம் ரூ. 5,880 ஆக உயரும். வருடாந்தம் ரூ. 4,728 பெறுமுன் வினைத்திறமைகாண் தடையுண்டு. அரசாங்க விதிகளுக்கிணங்கத் திருமணப் படியும் கொடுபடத்தக்கது.

(ஆ) 6 மாதங்களுக்குப் பின் பதவியில் உறுதிப்படுத்துவதற்கு உட்படுத்தி உள்ளூர் ஆட்சிச் சேவை செயலாளர் சேவையின் தரம் 5 க்கு, சேவையிலுள்ள சித்தியடைந்த பரீட்சார்த்திகள் நியமிக்கப்படுவார்கள். கீழ்க்கண்ட 3 (ஈ) பந்தியில் குறிப்பிடப்படும் சித்தியடைந்த பரீட்சார்த்திகள், 3 வருட தகுதிகாண் காலநிலையில் நியமிக்கப்படுவார்கள். 1969 உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரச் சட்டம் 18 ன் ஏற்பாடுகளுக்கும் அதன் கீழ் இயற்றப்படும் மேலும் திருத்தங்கள், பிரமாணங்களுக்கும், காலத்துக்குக் காலம் அதிகார சபையினால் விதந்துரைக்கப்படும் ஏனைய சேவை நிபந்தனைகளுக்கும் அவர்கள் உட்பட்டவராவர்.

3. **தகுதி.**—பின்வருபவர்களிடமிருந்து வரும் விண்ணப்பங்கள் கருத்துக்கெடுத்துக்கொள்ளப்படும் :—

(அ) 13.10.73 அல்லது அதற்கு முன் தமது பதவிகளில் உறுதிப்படுத்தப்பட்ட உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர் சேவையிலுள்ள தரம் 2, நி. எ. வ. உத்தியோகத்தர்கள்.

(ஆ) 13.10.73 அல்லது அதற்கு முன் எழுதுவினைஞராக 7 வருடங்கள் பூர்த்தி செய்த உள்ளூர் ஆட்சி எழுதுவினைஞர் சேவையின் பொது எழுதுவினைஞர் வகுப்பு உத்தியோகத்தர்கள், பொ. எ. வ. இலிகிதர், கி. ச. இலிகிதர், உதவி இலிகிதராகச் சேவை செய்ததையும் 7 வருடத்தில் உட்படுத்தலாம்.

(இ) 13.10.73 அல்லது அதற்கு முன் உ. ஆ. சேவையிலுள்ள தட்டெழுத்தாளர், சுருக்கெழுத்தாளர், மொழிபெயர்ப்பாளர், சிறுப்பர்கள் சேவையில் 7 வருடச் சேவையை முடித்தவர்கள்.

(ஈ) 4 பாடங்களில் உயர்தரப் பாடசாலைச் சான்றிதழ்ப் பரீட்சை அல்லது பொதுச் சான்றிதழ் (உயர்தரம்) ப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களும் 13.10.73 ல் 30 வயதுக்குட்பட்டவர்களும்.

4. **விண்ணப்பங்கள்.**—(அ) பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பங்கள் கீழ்க்கண்ட மாதிரிப் படிவத்தில் தயாரிக்கப்பட்டு கொழும்பு, த. பெ. 530, உள்ளூராட்சிச் சேவை அதிகாரச் சபை செயலாளருக்கு முகவரியிடப்பட வேண்டும்.

(ஆ) 13.10.73 அல்லது அதற்கு முன் செயலாளர், உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரச் சபைக்குக் கிடைக்கக்கூடியதாக விண்ணப்பங்கள், பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும். இத்திகதிக்குப் பின் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். தபாலில் ஏற்பட்ட தாமதங்கள் சார்பான முறைப்பாடுகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

(இ) தாம் கடமைபார்க்கும் திணைக்களத்துத் தலைவர் அல்லது உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவருடாகத் தமது விண்ணப்பங்களைப் பரீட்சார்த்திகள் அனுப்ப வேண்டும். எந்தப் பரீட்சார்த்தியும் இதனை செய்யத்தவறினால் அவர் தகைமையிழந்தவராவார்.

(ஈ) 13.10.73 அன்று அல்லது அதற்கு முன் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரச் சபைச் செயலாளருக்குக் கிடைக்கக்கூடியதாக அனுப்பும்படி கோரும் வேண்டுகோளுடன், நேரகாலத்துடன் தாம் கடமைபார்க்கும் திணைக்களத் தலைவரிடம்/உள்ளூராட்சி மன்றத் தலைவரிடம், தமது விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்கும்படி பரீட்சார்த்திகள் வேண்டப்படுகிறார்கள்.

(உ) **பரீட்சைக் கட்டணங்கள்.**—கீழ்க்காணும் அடிப்படையில் முத்திரைகளை ஒட்டி பரீட்சைக் கட்டணம் செலுத்தப்படவேண்டும். ஒட்டப்பட்ட முத்திரைகளின் மேல் பரீட்சார்த்தி ஒப்பமிட்டு அவற்றைப் பயனற்றவையாக்க வேண்டும். பரீட்சைக் கட்டணங்கள் எச்சந்தர்ப்பத்திலும் மீளளிக்கப்படமாட்டா :—

(அ) இளைப்பாற்றுச்சம்பளம் அல்லது சகாயநிதி திட்டத்தின் கீழ் நிரந்தரப் பதவிவகிக்கும் உத்தியோகத்தர்கள் ரூ. 20/-.

(ஆ) மற்றைய பரீட்சார்த்திகள் ரூ. 40/-.

**5. பரீட்சைக்கு அனுமதி.**—(அ) ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய பரீட்சார்த்திகளுக்கு உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகார சபை செயலாளர், பிரவேசப் படிவங்களை விநியோகிப்பார். பரீட்சையை மேற்பார்வை செய்ய நியமிக்கப்பட்ட உத்தியோகத்தரிடம், பரீட்சைக்குத் தோற்றும் பரீட்சார்த்திகள் தமது பிரவேசப் படிவங்களைக் கொடுக்க வேண்டும். இத்தகைய படிவத்தைக் கொடுக்கத் தவறும் பரீட்சார்த்தி தகைமையிழப்பவராவார்.

(ஆ) தமக்குக் கொடுக்கப்பட்ட பரீட்சை மண்டபத்தில் பரீட்சார்த்திகள் பரீட்சைக்கு அமரவேண்டும். தனக்குக் கொடுக்கப்பட்ட மண்டபத்தைத் தவிர்ந்த வேறு மண்டபத்தில் தோற்றும் பரீட்சார்த்திக்குப் பரீட்சைப் பிரவேசம் மறுக்கப்படும்.

(இ) பரீட்சைக்குத் தோற்றும் ஒவ்வொரு பரீட்சார்த்தியும், பரீட்சை தினத்தன்று, மேற்பார்வை செய்யும் பரீட்சிப்பவரிடம் தனது பிரவேசப் படிவத்தைக் கையளிக்க வேண்டும்.

(ஈ) பரீட்சை தினத்துக்குக் குறைந்தது 7 நாட்களுக்குள் தனது பிரவேசப்படிவம் கிடைத்திராத பரீட்சார்த்தி, தனக்குப் பிரவேசப் படிவம் கிடைக்கவில்லை என்றும், பின்வரும் தகவல்களைத் தந்தும் உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருடன் தொடர்பு கொள்ள வேண்டும் :—

(1) பரீட்சையின் பெயர் : ————.

(2) முழுப் பெயர் : ————.

(3) முழுத்தபால் முகவரி : ————.

**குறிப்பு.**—பரீட்சைக்கு அனுமதிக்கப்பட்டால், அது தகுதியை ஏற்றுக் கொண்டதற்கமையமாட்டாது.

6. இப்பரீட்சைக்கான பிரமாணங்களின் பிரகாரம் தகுதியற்றவர் என்று ஒரு பரீட்சார்த்தி காணப்பட்டால், பரீட்சைக்கு முன் அல்லது அதன்போது அல்லது அதன் பின் எந்த இடத்திலேனும், அவரது பரீட்சார்த்தம் இரத்து செய்யப்படத்தக்கது.

7. தம்மறிவின் எல்லைக்குள் பரீட்சார்த்திகள் தரப்பட்ட எந்தத் தகவல்களும் பொய்யானவை என்று காணப்படும் பட்சத்திலும் கூட அவர்கள் நியமனம் பெற்றிருந்தால் பதவி நீக்கம் செய்யப்படத்தக்கவராவர். வேண்டுமென்றே எந்த உண்மையையும் மறைத்தால், இவ் விதமே தண்டிக்கப்படத்தக்கவராவர்.

**8. உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றுவதற்காக விடுதலை.**—உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளரினால் அங்கீகரிக்கப்பட்ட விண்ணப்பங்களை அனுப்பிய உத்தியோகத்தர்கள் பரீட்சைக்குத் தோற்றும் பொருட்டுத் தமது சபையில் கடமை பார்க்கும் உத்தியோகத்தர்களுக்கு கடமை விடுதலை அளிக்கும்படி உள்ளூர் ஆட்சி மன்றத் தலைவர்கள் தயவுடன் வேண்டப்படுகிறார்கள்.

**9. அடையாள அட்டைகள்.**—தாம் தோற்றும் ஒவ்வொரு பாடத்தின் போதும், மேற்பார்வையாளரின் திருப்திக்கிணங்க பரீட்சை மண்டபத்தில் தாம் இன்னாரென்ற அடையாளத்தை பரீட்சார்த்திகள் நிரூபிக்கவேண்டும். இதற்கெனப் பின்வரும் தஸ்தாவேஜுகளில் ஏதாவதொன்று ஏற்றுக்கொள்ளப்படும் :—

(அ) அஞ்சற்பகுதி மா அதிகாரியினால் விநியோகிக்கப்பட்ட அடையாள அட்டை ;

(ஆ) இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்குள் விநியோகிக்கப்பட்ட சட்டப்பெறுமதியான கடவுச்சீட்டு ;

(இ) அரசாங்கத் திணைக்களத்தின் அதிகாரத்தின் பேரில், இப்பரீட்சை தினத்துக்கு முந்திய 3 வருடங்களுக்குள் விநியோகிக்கப்பட்டதும், உடமையாளரின் புகைப்படத்தைக் கொண்டதுமான உத்தரவுச்சீட்டுச் சான்றிதழ், அல்லது வேறு எந்தத் தஸ்தாவேஜுகளாவது.

பரீட்சை மண்டபத்தில் தனது அடையாளச் சீட்டைச் சமர்ப்பிக்கத் தவறும் எந்தப் பரீட்சார்த்தியும் தகைமையிழந்தவராவார்.

**10. பரீட்சைத்திட்டம்.**—பரீட்சைப் பாடங்களும், ஒவ்வொரு பாடத்துக்குக் கொடுக்கப்படும் புள்ளிகளும் கீழே தரப்படுகின்றன. எல்லா எழுத்துத் தாள்களிலும், கூடாத கையெழுத்துக்கும் எழுத்துக்கூட்டல் பிழைகளுக்கும் புள்ளிகள் கழிக்கப்படும். தெளிவற்ற கையெழுத்துடைய பரீட்சார்த்திகள் தகைமையிழப்பதற்குட்பட்டவராவர்.

புள்ளிகள்

(அ) உள்ளூராட்சி மன்ற கணக்குகள், வருடாந்த வரவு செலவுத் திட்டமும், குறைநிரப்பும் வரவு செலவுத் திட்டமும் தயாரித்தல் போன்றவை உட்பட கணக்கிடுதல், நிதிமுறை அனுசரணைகள், அதிகாரங்கள் 19,20 தவிர்ந்த பகுதி 2 இன் அரசாங்க நிதிப்பிரமாணங்கள் (அதாவது விடுதலை, பிரமாணம், இலவச புகை வண்டிச் சீட்டுப் போன்றவை) உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைகளினாலும், உள்ளூராட்சி ஆணையாளராலும், அறிவுறுத்தல்கள் அனைத்தும்
(1½ மணித்தியாலத் தாள்) .. 100

(நகரசபை, பட்டணசபை, கிராமச்சபைக் கணக்குகள், நெடுங்கூட்டல்கள் போன்றவை பற்றிய கேள்விகளைக் கொண்டது இத்தாள். எண்களை இம்மி தவறாது கையாளல் பற்றியும் மேற்படி உள்ளூர் ஆட்சி மன்றங்களுக்குப் பொருந்தும் கணக்குகளில் எளிய அத்திவார விதிகள் பற்றிய அறிவு பற்றியும் பரீட்சிக்க இத்தாள் வரையப்படும்)

(ஆ) உள்ளூர் ஆட்சி மன்ற அலுவலக அமைப்பு நடைமுறை அனுசரணைகள் ஆகியவற்றை உட்படுத்திய உள்ளூராட்சிச் சட்டம்
(2 மணித்தியாலத் தாள்) .. .. 100

(இத்தாள் இரண்டு பகுதிகளாகப் பிரிக்கப்படும். மொத்தப் புள்ளிகளில் 50 சதவிகிதம் ஒவ்வொரு தாளுக்கும் உண்டு)

பகுதி—1 பின்வருவனவற்றின் அடிப்படையில் உள்ளது :

(அ) நகர சபைகள், பட்டண சபைகள், கிராமச்சபைகள் கட்டளைச் சட்டம்.

(ஆ) உள்ளூராட்சிச் சேவை கட்டளைச் சட்டமும் அதன் கீழ் இயற்றப்பட்ட பிரமாணங்களும் சுற்று நிருப அறிவுறுத்தல்களும்.

பகுதி—2 (அ) பின்வரும் கட்டளைச் சட்டங்கள் பற்றியும் அவற்றின் கீழ் இயற்றப்பட்ட விதிகள், பிரமாணங்கள், துணைச்சட்டங்களின் அடிப்படையிலும் இத்தாள் உள்ளது :—

(1) பொது அரங்காட்டுக் கட்டளைச் சட்டம்.

(2) களியாட்ட வரிக் கட்டளைச் சட்டம்.

(3) வீடமைப்பும் நகரத் திருத்தமும் பற்றிய கட்டளைச் சட்டம்.

(4) ஊன்விளைஞர் கட்டளைச் சட்டம்.

(5) உள்ளூராட்சி மன்ற நியமத்துணைவிதிக் கட்டளைச் சட்டம்.

(6) இடுகாடுகள், சுடுகாடுகள் கட்டளைச் சட்டம்.

(7) மின்சார அதிகாரச் சட்டம்.

(8) உணவும் மருந்துச்சரக்குகளும் அதிகாரச் சட்டம்.

(9) வாகனங்கள் கட்டளைச் சட்டம்.

(10) எலவிற்பனையாளர் தரகர் கட்டளைச் சட்டம்.

(11) விலங்கு விசர்நோய் கட்டளைச் சட்டம்.

(12) பட்டின ஊர் திட்டமைப்புக் கட்டளைச் சட்டம்.

(13) நிறைகளும் அளவைகளும் பற்றிய கட்டளைச் சட்டம்.

(14) உள்ளூர் ஆட்சி மன்றத் தேர்தற் கட்டளைச் சட்டம்.

(15) தெரு வசூலிப்புக் கட்டளைச் சட்டம்.

(16) நாய் பதிவுக் கட்டளைச் சட்டம்.

(ஆ) நகரசபை, பட்டணசபை, கிராமசபை அலுவலகங்களை ஒழுங்குபடுத்தும் அமைப்பு நடைமுறை, முறைமை.

புள்ளிகள்

(இ) (1) சிங்களம் அல்லது தமிழ் (1 மணித்தியாலத் தாள்) (தேர்ந்தெடுக்கப்பட்ட மொழியில் கருமமாற்றும் அறிவு எதிர்பார்க்கப்படும்). பின்வரும் அப்பியாசங்களைக் கொண்டதாகக் கேள்வித்தாள் அமையும் : 100

(அ) எளிய வசனப் பகுதிகளின் பொழிப்பு.

(ஆ) விவரணைகள், கடிதம் எழுதல், உரையாடல்கள் போன்றவை.

(இ) (1) எளிய வாக்கியங்களைச் சிங்களத்துக்கு/தமிழுக்கு மொழி பெயர்த்தல், (2) எளிய பகுதியை ஆங்கிலத்துக்குப் பெயர்த்தல்.

தகைமை பெறும் சோதனையாக மாத்திரமே இத்தாள் கருதப்படும் இத்தாளுக்கு ஒதுக்கப்பட்ட மொத்தப் புள்ளிகளில் குறைந்தது 30 சத விகிதமாகுதல் ஒவ்வொரு பரீட்சார்த்தியும் பெறவேண்டியுள்ளது.

**குறிப்பு.**—பின்வரும் பரீட்சைகளில் ஏதாவதொன்றில் சித்தியடைந்துள்ள பரீட்சார்த்திகள், சிங்களம்/தமிழ் பாடம் (3) லிருந்து தவிர்க்கப்படுவதற்குத் தகுதியுடையவராவர் :

(1) உயர் தரத்தில் அல்லது சாதாரண தரத்தில் சிங்களத்தில் அல்லது தமிழில் தேர்ச்சிப் பரீட்சை.

(2) தரம் 4 ல் அல்லது தரம் 5 ல் சிங்களத்தில் அல்லது தமிழில் தேர்ச்சிப் பரீட்சை.

(3) இலங்கை சிரேட்ட பாடசாலை தராதரச் சான்றிதழ் (சிங்களம்/ தமிழ்) பரீட்சை.

(4) சிங்கள மொழி அல்லது தமிழ் மொழி ஒரு பாடமாகக் கொண்ட ஆங்கில மொழி மூலமாக எடுக்கப்பட்ட இலங்கை சிரேட்ட பாடசாலைத் தராதரச் சான்றிதழ் பரீட்சை.

(5) சிங்கள அல்லது தமிழ் மொழி மூலமாக எடுக்கப்பட்ட இலங்கை கல்விப் பொதுச் சான்றிதழ் (சாதாரண தரம்)

11. சித்தியடைந்த பரீட்சார்த்திகளின் பெயர்கள் இலங்கை அரசாங்க வர்த்தமானியின் IV வது பகுதியில் பிரசுரிக்கப்படும். உள்ளூர் ஆட்சிச் சேவையில் வெற்றிடங்கள் வந்தாலும் வருமபொழுதும் அவர்களுக்கு நியமனங்கள் கொடுக்கப்படும்.

எட்கார் பர்னாந்து,
செயலாளர்,
உ. ஆ. சே. அ. ச.

உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைத் திணைக்களம்,
த. பெ. 530,
கொழும்பு 1,
1973 ம் ஆண்டு ஆகஸ்ட் மீ 20 ந் உ.

சுட்டிலக்கம் :
(அலுவலகப் பாவிப்புக்கு மாத்திரம்)

உள்ளூர் ஆட்சிச் சேவை

**உள்ளூர் ஆட்சிச் செயலாளர் சேவையின் தரம் 5 க்கு ஆட்சேர்ப்புக்கான பரீட்சை—17.11.1973**

பிரவேசத்துக்கான விண்ணப்பம்

**கவனிக்க.**—பரீட்சார்த்தியின் சொந்தக் கையெழுத்தினால், சரியாகவும் தெளிவாகவும் இப்படிவம் நிரப்பப்பட்டு, தாம் கடமை பார்க்கும் உள்ளூராட்சி மன்ற/திணைக்களத் தலைவரூடாக 13.10.73 க்கு முன் கொழும்பு 1, த. பெ. 530, உள்ளூர் ஆட்சிச் சேவை அதிகாரசபைச் செயலாளருக்குக் கிடைக்கும்படியாக அனுப்பப்படல் வேண்டும்.

1. பரீட்சார்த்தியின் முழுப் பெயர் : ————.
(தடித்த எழுத்துக்களில்)

2. பரீட்சார்த்தி தற்பொழுது சேவை செய்யும் உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் : ————.

3. தற்போதைய பதவியும் அதற்கு நியமிக்கப்பட்ட தேதியும் : ————

4. உள்ளூர் ஆட்சி மன்றத்துக்கு நியமிக்கப்பட்ட முதற் திகதி : ————.

5. கீழ்க்கண்டவற்றில் நியமிக்கப்பட்ட திகதி : ————.
(1) தட்டெழுத்தாளர் சுருக்கெழுத்தாளர் : ————.
(2) உ. ஆ. சே. எழுதுவினைஞர் சேவையில் தரம் 2, நி. எ. வ. எழுதுவினைஞர் பதவியில் உறுதிப்படுத்தப்பட்டதா ? : ————.
(3) உ. ஆ. சே. பொ. எ. வ. எழுதுவினைஞர் அல்லது இ. ச. இலிகிதர் அல்லது உதவி இலிகிதர் : ————.
(4) எழுதுவினைஞர் தரங்களில் (அதாவது பொ. எ. வ. தரம் 2, நி. எ. வ.) எழுதுவினைஞர் சேவை செய்த வருடங்களின் எண்ணிக்கை : ————.

6. முதல் நியமனத் திகதி முதல் தற்போதைய தரம் அல்லது வகுப்பில் பிரவேசம் வரையுள்ள பதவிப் பெயர்கள் : ————.

7. வர்த்தமானி அறிவித்தலின் 10 வது பந்தியிலுள்ள சிங்களம்/ தமிழ் பாடத்தில் (இல. 3) இருந்து பரீட்சார்த்தி தவிர்க்கப்படத் தகுதியுடையவரா ? ஆமாயின் பின்வருவனவற்றைக் தருக :—
(அ) சித்தியடைந்த பரீட்சையின் பெயர் : ————.
(ஆ) பரீட்சை நடைபெற்ற திகதி : ————.
(இ) சுட்டிலக்கம் : ————.

8. பின்வரும் இரு பாடங்களில் எந்தப்பாடத்தை எடுப்பீர்கள் என்று குறிப்பிடுக :
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.

9. பின்வரும் மொழிகளில் எந்தமொழி மூலம் பரீட்சைக்குத் தோற்றுவீர்கள் என்று குறிப்பிடுக :—
(அ) சிங்களம் : ————.
(ஆ) தமிழ் : ————.
(இ) ஆங்கிலம் : ————.

10. வர்த்தமானி அறிவித்தலின் பந்தி 3 ன் பிரிவு " ஈ " இன் பிரகாரம் விண்ணப்பித்தீர்களாயின், சித்தியடைந்த பரீட்சை, பரீட்சை நடந்த வருடம், சித்தியடைந்த பாடங்களைக் கூறவும் : ————.

.................... தேதியன்றோ அதற்கு முன்னரோ விண்ணப்பம் தங்களிடம் வந்து சேராவிட்டால் அது நிராகரிக்கப்படுமெனவும் ஒட்டப்பட்ட முத்திரைகளின் பெறுமதி மீளளிக்கப்படமாட்டாதெனவும் நான் குறித்துக்கொண்டேன்.

| |
|---|
| பரீட்சார்த்திகள் இவ்விடத்தில் முத்திரைகளை ஒட்டி அவற்றை பயனற்றவையாக்க வேண்டும் |

..........................................
பரீட்சார்த்தியின் கையொப்பம்.

திகதி : ————.

செயலாளர், உ. ஆ. சே. அ. ச.

இவ்வுள்ளூர் ஆட்சி மன்றம்/திணைக்களம் பணியாளர்களும்........ ................ஆக ................ முதல் மேற்படி பரீட்சார்த்தி சேவை செய்கிறார் என்றும், அவரது சேவைகள் நெடுகிலும் திருப்திகரமானவை என்றும் நான் சான்றுரைக்கிறேன். அவரால் விண்ணப்பத்தில் குறிப்பிடப்படும் தகவல்கள் சரியானவை.

ஆணையாளர்/விசேட ஆணையாளர்/தலைவர்.

..........................................
உள்ளூராட்சி மன்றம்.

திகதி : ————.

9–128—07.09.73 ந் திகதிய வர்த்தமானி இல. 76

## அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்

01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது

# இலங்கைக் குடியரசு வர்த்தமானி

வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. சனிக்கிழமைகளில் மு. ப. 8.00 மணி முதல் நண்பகல் 12.00 மணி வரையும், மற்றும் நாட்களில் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 3.30 மணி வரையும் காரியாலய நேரமாகும்.

4. சனிக்கிழமைகளில் மு. ப. 11.00 மணிக்கும், மற்றும்நாட்களில் பி. ப. 2.00 மணிக்கும் பணம் கொடுக்கல் வாங்கல் முடிவுறும்.

5. சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும். தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்றல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல் பிழைகளையும், காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும்.

7. கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.

8. வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் "சுப்பிறீம் கோட் புறெக்ரறுல்" கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.

10. அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—

| | | ரூ. | ச. |
|---|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய .. | .. | 20 | 0 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன் பகுதி | .. | 20 | 0 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம் .. | .. | 220 | 0 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | .. | 440 | 0 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. 1966 ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.

13. சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும்.

| இலங்கைக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. | உள்ளூர் ச. | | வெளியூர் ரூ. | வெளியூர் ச. |
|---|---|---|---|---|---|
| ஒவ்வொரு பகுதியும் .. .. .. | 46 | 0 | .. | 60 | 0 |
| முதற் பகுதியின் தனிப்பிரிவு .. .. .. | 36 | 0 | .. | 42 | 0 |
| முதற் பகுதியின் இரு பிரிவுகள் .. .. | 43 | 50 | .. | 51 | 50 |

ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக் கூடியதுமான காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்பெறும்.

### தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்

| | ரூ. | ச. | | தபாற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|---|---|
| (அ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும் .. .. | 0 | 50 | .. | 20 |
| (ii) வர்த்தமானியில் இடம்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும் .. .. | 1 | 0 | .. | 20 |
| (ஆ) (i) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 30 | .. | 15 |
| (ii) வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற்பகுதியின் ஒவ்வொரு பிரிவும் .. | 0 | 60 | .. | 15 |

இவைகளில் ஏவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவர்.

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும் வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ்வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்குத் தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்து சேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

### அட்டவணை 1973

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| செத்தெம்பர் .. | 7.9.73 | வெள்ளி .. | 31.8.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 14.9.73 | வெள்ளி .. | 7.9.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |
| | 21.9 73 | வெள்ளி .. | 14.9.73 | வெள்ளி .. | ந.ப. 12 00 |
| | 28.9.73 | வெள்ளி .. | 21.9.73 | வெள்ளி .. | ந.ப. 12.00 |

எல். டபிள்யு. பீ. பீரிஸ்,
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1972 ம் ஆண்டு ஓகத்து மீ 18 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.